மேற்படி இவ் ஆச்சிரமத்தில் சேரும் பிள்ளைகளின் நலன் கருதி அவர்களின் எதிர் காலத்தின் வேலைத்திட்டங்கள், நல்ல படிப்புகள், சிறு தொகையை அவர்களின் பெயரில் சேமித்து வைத்தல், செயல்படுத்தும் இவ் ஆச்சிரமம்.



மேற்காட்டியுள்ள பாடசாலை 2 வீடுகள் கட்டுவதற்கான நிதியினை ஹம் ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தாவின் நிதி திட்டத்தின் கீழ் அவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம். ஆனால் மேற்கொண்டு பிள்ளைகளை பராமர்ப்பற்கு மாத செலவாக அதிகப்படி நிதி தேவைப்படுகின்றது. ஆகவே ஆஸ்தீக நெஞ்சம் கொண்ட, அன்பு உள்ளம் கொண்ட, உதவும் கரங்கள் கொண்ட யாவராயினும் உதவி புரியலாம்.

## உதவி புரியக்கூடிய வகைகள். :

01. தங்கள் பொறுப்பில் ஒவ்வொரு பிள்ளைகளையும் பொறுப்பெடுத்தல் (அவர்களுக்கான மாத செலவு)

02. தங்களால் முடிந்த ஒரு தொகை நிதியினை ஆச்சிரமத்திற்கு செலுத்துதல்.

## அன்னதானம் வழங்குதல்

ஸ்ரீ ஆதிசங்கரர் ஆச்சிரமக் குழந்தைகளுக்கு அன்னதான உதவி அளிக்கலாம் உங்கள் பெற்றோரின் வருடாந்த ஞாபகார்த்த நாட்களில், உங்கள் திருமண நாட்களில், உங்கள் குழந்தைகளின் பிறந்ததின நாட்களில் அன்னதானம் செய்யலாம்.

## மேற்படி விபரம்

01. ஒரு நாள் விஷேட உணவு (வடை, பாயாசம், பழம் போன்றவற்றுடன் மூன்று வேளை)

02. ஒரு நாள் சாதாரன சாப்பாடு மூன்று வேளை

03. மதிய விஷேட உணவு ஒருவேளை

04. மதிய சாதாரன உணவு ஒருவேளை

05. காலை உணவு மட்டும்

06. இதர சிற்றுண்டிகள்

## ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவு, உடை, கல்வித் திட்டங்கள்

01. குழந்தைகளின் உணவு, உடை, கல்வி மற்றும் செலவுகளுக்கான மாதாந்த செலவுக்குரிய உதவியாக வழங்கலாம்.

02. குழந்தைகளுக்கான அப்பியாசப்புத்தகம், பாடப்புத்தகம், பென்சில், பேனா போன்ற உபகரணங்களை வழங்கி உதவலாம்.

03. எதிர்கால உயர் கல்விக்கான செலவினை ஏற்று உதவலாம்.

04. குழந்தைகளின் பிரயாணத் தேவைளை பூர்த்தி செய்வதற்காக இரண்டு பஸ் (மினி பஸ்) வாங்க வேண்டியுள்ளது அதனை வேண்டுவதற்கு உதவலாம்.



05. பொங்கல், வருஷம், தீபாவளி, நல்ல நாள் பெரிய நாளின் செலவுகளை தாங்கள் ஏற்றுக்கொள்ளலாம்.



## மருத்துவம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் ஆச்சிரம சிறுவர்களுக்கான இலவச மருத்துவ சேவை அல்லது அதற்கொப்பான வகையில் உதவலாம்.

இறையருளால் நடைபெறும் இப்பணிகளுக்கு உதவி செய்வதுடன் தங்கள் நல் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

## எங்கள் நோக்கம்.

குழந்தைகளை இறை சிந்தனையுடனும் நல்லொழுக்கத்துடனும் கல்வி கற்க வைத்து சமுதாயத்தில் சிறந்த நற் பிரஜைகளாகவும், நல் அறிஞர்களாக ஆக்குவதே. ஆகவே அவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பில் உள்ளோம்.

“இரக்கமுள்ள இதயத்தில் இறைவன் வாழ்கின்றான்” என்பது ஆன்றோர் கருத்து.

இவ்வாக்கை மனதில் கொண்டு சிறுதுளி பெரு வெள்ளம் என்பதற்கிணங்க கருணையுள்ள அனைவரும் இவ் அரும்பணிக்கு உங்களால் இயன்றளவு உதவியை வழங்கி இறையருளை பெறுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**இவ்வாச்சிரமச் செயற்பாட்டுக்குழு:**

**சிவஸ்ரீ கிரீட. உருத்திரபுரேஸ்வரக்குருக்கள்.**
**சிவஸ்ரீ இராசையா அமிர்தேஸ்வரஐயா (அஜுரன்)**
**சிவஸ்ரீ லோகநாத கிருஷ்ணகுமார்ஐயா**